2024 ஜூன் 21]

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஏற்கெனவே இயங்கி வந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் பல்வேறு காரணங்களால் முற்றிலுமாக செயலிழந்தன. தற்போது இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகள் அரசின் முக்கியத் திட்டங்களான வேட்டி, சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் துணிகள் விநியோகம் செய்யத் தேவையான நூலை வழங்கி வருகின்றன. இந்நிலையில், செங்கம், தண்டராம்பட்டு பகுதியில் பருத்தி நூல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு என்பது கல்வராயன்மலை அடிவாரத்தில் இருக்கிற ஓர் ஒன்றியம். பக்கத்திலே இருக்கின்ற தருமபுரி மாவட்டத்தையும், கிருஷ்ணகிரி மாவட்டத்தையும் இணைக்கின்ற பகுதி. அந்தப் பகுதிகளெல்லாம் வானம் பார்த்த பூமி. பருத்திதான் அதிகமாக நடுகின்றோம். எனவே, எத்தனை நூற்பாலைகள் நிறுத்தப்பட்டிருந்தாலும், புதிதாக ஒரு நூற்பாலையை நவீன வசதிகளோடு தண்டராம்பட்டு, அரூர், ஊத்தங்கரை தொகுதிகளை உள்ளடக்கி ஓர் இடத்திலே அரசு அமைக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி,: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 12 நூற்பாலைகள் பல்வேறு காரணங்களினாலே முற்றிலுமாக செயலில் இல்லை. சட்டப்பூர்வ ஆய்வு மற்றும் அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் பேரில் செயலிழந்த 12 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983, பிரிவு 137 (2b)-ன்கீழ் கலைக்கப்பட்டன. அதுமட்டுமல்லாது, மத்திய அரசுமூலம் செயல்பட்ட கிட்டத்தட்ட*

7 NTC mills மூடப்பட்டுள்ளன. அதனால், எந்தக் காரணத்தைக் கொண்டும் நூற்பாலையை புதியதாக திறக்கவே முடியாது.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செங்கம் நகரத்தையொட்டி ஏற்கெனவே 5 ஏக்கர் நிலம் பட்டுப் பூச்சி வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்டு, அந்த இடம் இப்போது பயன்பாடற்றுக் கிடக்கிறது. அதில், இந்தத் துறையின் சார்பில், ஏதாவது ஒரு பயிற்சி மையமாவது அமைத்து, அந்த நிலத்தைப் பயன்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கு ஏதாவது வாய்ப்பிருந்தால் செயல்படுத்த முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

தொழிலாளர்களைத் தேடி மருத்துவம்

***153319—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

‘தொழிலாளர்களைத் தேடி மருத்துவம்’ திட்டம் குறித்து விளக்க அரசு முன்வருமா?

2024 ஜூன் 21]

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொற்றா நோய்களுக்கான சேவைகள் வழங்குவதில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில், தொற்றா நோய்களுக்கான சேவைகளை பயனாளிகளின் இல்லங்களுக்கே தேடிச் சென்று அளிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான "மக்களைத் தேடி மருத்துவம்" என்கிற திட்டம் 5-8-2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் களப் பணியாளர்கள், இல்லங்களுக்கே சென்று தொற்றா நோய் பரிசோதனைகளைச் செய்யும் நேரத்தில், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்பாலான மக்கள் வேலைக்குச் செல்வதால், அவர்கள் இச்சேவைகள் கிடைக்காமல் விடுபடுகின்றனர் என்பது கண்டறியப்பட்டது. இந்தவகையில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் தொழிலாளர்களின் நலனில் தனி அக்கறை கொண்டு தொழிற்சாலைகளிலும், கட்டுமானம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், தொற்றா நோய்களினால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும்பொருட்டு சிறப்பு முயற்சியாக 'தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம்' எனும் தொற்றா நோய்களுக்கான திட்டம் ஒன்று 9-1-2024 அன்று திருவள்ளூரில் இருக்கின்ற Hyundai Mobis Plant-ல் தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை 711 தொழிற்சாலைகளிலுள்ள 8.35 இலட்சம் தொழிலாளர்களுக்கு அந்தத் திட்டம் பயன்படுகின்ற வகையில், ஊரக நலப் பணிகள் இயக்ககம் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் (Directorate of Industrial Safety and Health) என்கிற அமைப்புகளோடு சேர்ந்து உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்களுக்கான பரிசோதனை முகாம்கள் அந்தந்த தொழிற்சாலைகளிலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தால் புலம்பெயர் தொழிலாளர்களும் பயனடைந்து வருகின்றார்கள் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2024 ஜூன் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பான இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இதுவரை இந்தத் திட்டத்தினால் எத்தனை தொழிலாளர்கள் பயன்பெற்றுள்ளனர் என்பதையும், தொழிற்சாலைகள் நிறைந்த, சுமார் 2 இலட்சம் தொழிலாளர்களுக்குமேல் பணியாற்றக்கூடிய அம்பத்தூர் தொழிற்பேட்டையில் இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்மூலம் 10–6–2024 வரை 476 தொழிற்சாலைகளில் 2,87,114 நபர்களுக்கு தொற்றா நோய்களுக்கான உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களுக்கான பரிசோதனை செய்யப்பட்டதில் 25,075 பேர் புதியதாக தொற்றா நோய்களுக்கான சாத்தியக்கூறு உள்ளவர்கள் என கண்டறியப்பட்டுள்ளனர். மேலும், ஏற்கெனவே தொற்றா நோய் பாதிப்புள்ளவர்கள் 11,062 நபர்கள் எனவும் தொற்றா நோய்களான உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் பாதிப்பு இல்லாதவர்கள் 2,50,977 எனவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

அந்தவகையில், அம்பத்தூர் தொகுதியில் மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் கூறியிருப்பதைப்போல சென்னை மாநகராட்சியிலுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டைப் பகுதியில் 500–க்கும் மேற்பட்ட பெரிய தொழிற்சாலைகளும், சிறிய தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு கிண்டி, திருமுடிவாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளிலும் குறு, சிறு தொழில்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கேயெல்லாம்கூட

2024 ஜுன் 21]

இத்திட்டத்தை விரிவாக்கம் செய்து அவர்களுக்கும் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்தப் பணியும் விரைவில் நடைபெறவிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாடு முழுவதும் திருமணமாகிய தம்பதியினரில் 100–ல் 5 பேருக்குமேல் குழந்தையின்மை தன்மையை அடைகின்றனர். இதற்கு உணவு, வாழ்வியல் முறை, பழக்கவழக்கங்கள் போன்ற பல்வேறு காரணங்களைக் கூறினாலும், பிரச்சினைகளைச் சரிசெய்வதற்கு பெரும்பான்மையான மக்கள் தனியார் மருத்துவமனையையே நாடுகின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும்விதமாக தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சிறப்பு மருத்துவ மையம் ஒன்றை அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உருவாக்க வேண்டும். அந்த மையத்தில் குழந்தையின்மைக்கு சிகிச்சை மட்டுமல்லாது, உடல் ஆரோக்கியம் குறித்தும், குழந்தை பெற்றெடுப்பது குறித்தும் முறையான counselling வழங்கப்பட வேண்டும். இதுபோன்ற திட்டங்கள் வகுக்க அரசிடம் தற்போது ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா அல்லது பின்வரும் காலங்களில் இதுகுறித்த திட்டம் வகுக்க அரசு முன்வருமா என்பது குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2024 ஜூன் 21

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற வட்டார பொது மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மகப்பேறுவிற்காக வருகின்ற தாய்மார்களுக்கு counselling திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல அதில் சிறப்புக் கவனம் செலுத்தி, இன்னமும் அதைக் கூடுதலாக்கும் முயற்சியை துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மொடக்குறிச்சி தொகுதியில் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. கடந்த வருடம் அதை மேலும் மேம்படுத்துவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நிதி ஒதுக்கி ஏற்பாடு செய்தார்கள். கடந்த ஒரு வருடமாக அந்த இடத்தில் எந்த வேலையும் நடைபெறவில்லை. அங்கு நோயாளிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் காத்திருப்பதற்கு ஓர் இடம் இல்லை. OP பார்ப்பதற்கும் சரியான இடம் இல்லை. அந்தச் சுகாதார நிலையத்திற்கு ஒதுக்கிய நிதியில் கூடிய விரைவில் அந்தப் பணிகளை முடித்துக்கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியில் இருக்கிற மருத்துவமனையில் 15-வது நிதி ஆணையத்தின் ஆதாரம் கொண்டு, பணிகள் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

2024 ஜூன் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மிகப் பரவலாக வரக்கூடிய நோய் புற்று நோய். இந்தப் புற்று நோய்க்கு சிகிச்சை பெறவேண்டுமெனில் அந்த மருத்துவமனை, நம்முடைய அரசின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில்தான் இருக்கிறது. புற்று நோய், நூறில் கிட்டத்தட்ட 38-லிருந்து 42 சதவிகிதம் பேருக்கு வரக்கூடிய சூழல் இன்றைக்கு உருவாகி இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஒரு புற்று நோய் சிறப்புப் பிரிவை ஏற்படுத்த முயற்சி செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தக் கேள்வியை உங்கள் முன்னால் வைத்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற்று நோயைப் பொறுத்தவரையில், இன்றைக்கு உலகத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கிற நோய்களில் ஒன்றாகவே இருந்து கொண்டிருக்கிறது. அந்தவகையில்தான் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால் வரை தமிழகத்தில் புற்று நோய் ஆராய்ச்சி கருவி,* PET-CT scan *கருவி இரண்டு இடங்களில் மட்டுமே இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இரண்டு இடங்களில் மட்டுமே இருந்த* PET-CT scan *கருவி நாகர்கோவில், தஞ்சாவூர், சேலம், கோவை, காஞ்சிபுரம் ஆகிய ஐந்து இடங்களையும் சேர்த்து இப்போது 7 இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது.*

அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. நான்கு, ஐந்து குறிப்பிட்ட மாவட்டங்களில் புற்று நோய்க்கான அறிகுறிகள் அதிகரித்து வருகிற நிலையில் அந்த மக்களுக்கு முழுமையாகப் பரிசோதனைகள் செய்து,